சிறப்பிதழ்
**Special Issue**

2-ஆடி 2050
18-July 2019

ISSN : 2321-0737

பல்கலைக் கழக மானியக் குழு அங்கீகாரம் பெற்றத் தமிழ்ப் பன்னாட்டு ஆய்விதழ்
UGC APPROVED INTERNATIONAL THAMIZH JOURNAL
UGC Journal No.40719

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)
(கலை & மனிதவியல்)

# Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)
(Arts & Humanities)

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*
*Advisory Editor*
*Dr. N. Chandrasegaran*
*Editorial Board*
*Dr. S. Kumaran*
*Dr. Oppila Mathivanan*
*Dr. R. Rajagopal*
*Dr. Aranga. Pari*
*Dr. PM. Jamahir*
*Dr. S. Rajaram*
*Dr. R. Velmurugan*
*Dr. S. Chitra*
*Dr. E.R. Ravichandran*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. K. Thilagavathi*
*Dr. P. Velmurugan*
*Dr. G. Sheik Meeran*
*Dr. P. Selvakumar*
*Dr. M. Karunanithi*
*Dr. A. Kaleel Rahman*
*Dr. A. Senthil Kumar*
*Dr. S. Tamil Velu*
*Dr. M. Arunachalam*
*Dr. R. Vijayarani*
*Dr. V. Dhanalakshmi*
*Dr. S. Ramesh*
*Dr. J. Chandrakala*
*Dr. C. Prabhakaran*
*Dr. P. Santhi*
*Prof. Balasundaram Elayathamby*
*Dr. A. Thoufiq Rameez*
*Dr. S. Bharathi Prakash*
*Dr. J. Raja*
*Dr. J. Selva Kumar*
*Dr. D. Alagudurai*
*Dr. Chandrika Subramaniyan*
*Dr. Manivannan Murugesan*
*Dr. V. Kalathi*
*Mr. G. Senthil*

சிறப்பிதழ் : பன்னாட்டுக் கருத்தரங்கம் -2019
தமிழ்த்துறை (தன்நிதி)
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)
பொள்ளாச்சி - 642 001, தமிழ்நாடு, இந்தியா

## தமிழ் இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**
முனைவர் இரா. விஷ்னுப்பிரியா
உதவிப்பேராசிரியர்

பதிப்புக்குழு உறுப்பினர்கள்
முனைவர் த. பரமேஸ்வரி (துறைத்தலைவர்)

முனைவர் த. கீதாஞ்சலி முனைவர் ந. பிரகாஷ் முனைவர் இரா. ஜெயந்தி
முனைவர் ம. சித்ரகலா முனைவர் மு. சுகந்தி பேரா. ர. சூர்யா பேரா. அ. மகபுபூ
தமிழ்த்துறை (தன்நிதி), நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி), பொள்ளாச்சி –6

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

4 பகுதி-2 சிறப்பிதழ் Special Issue

| | | | |
|---|---|---|---|
| 61. | அ. ஜாஸ்பின் ஷீலா | "கிணற்றில் விழுந்த தீண்டாமை" சிறுகதைத் தொகுப்பில் மனிதநேய மாண்புகள்" | 210-213 |
| 62. | செ. ஐஸ்வர்ய சுகிலா & ஜே. ஜெயரதி பொன்மலர் | கனிமொழியின் அகத்திணை கவிதையில் பெண்நிலை | 214-217 |
| 63. | ஜீ. பாண்டியலட்சுமி | சிலப்பதிகாரத்துள் காணலாகும் மாண்புடைமனிதர்கள் | 218-221 |
| 64. | அ. சஜன் | ஜி. நாகராஜனின் குறத்தி முடுக்கு நாவலில் பரத்தையர் | 222-224 |
| 65. | ப. சவிதா | அகமரபுகள் நோக்கில் சம்பந்தர் பாடல்களும் மனிதநேயமும் | 225-229 |
| 66. | திரு. ஆ.சந்திரசேகர் | "அட்டகுளத்திலும்ஒட்டிக்கொள்ளும் ஆம்பல்கவி" | 230-232 |
| 67. | எம்.மெஹ்முதா | 101 மனுஷ்யபுத்திரனின் கவிதைகளில் மனித நேயம் | 233-237 |
| 68. | செ.மகேஸ்வரி | தமிழர் பண்பாட்டில் பசிப்பிணி போக்கும் மனிதநேய மாண்புகள் | 238-242 |
| 69. | தி.சுமதி & ப.சக்தி குமாரவேல் | வேதாத்திரிய நோக்கில் குடும்பச் சீர்திருத்தச் சிந்தனைகள் | 243-246 |
| 70. | சு.பாத்திமா | ப.க.பொன்னுசாமியின் 'படுகளத்தில்' மனிதநேயம் | 247-250 |
| 71. | மா.நடராசன் | இராமலிங்க வள்ளலாரின் மனிதநேயச் சிந்தனைகள் | 251-254 |
| 72. | கு.ஜெயந்தி | சங்க இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள் | 255-258 |
| 73. | ந.ஜெயவசந்தி | புறநானூற்றில் மனித நேய பண்புகள் | 259-262 |
| 74. | கோ.ஜெமிலா | புறநானூற்றில் மனிதநேயப் பண்புகள் | 263-265 |
| 75. | செ.கிளாறா டெல்பின் ஜடா & நா.ரா.ஷிபஜா | கிறிஸ்தவ இலக்கியத்தில் இடம்பெறும் திருநங்கைகளின் மனிதநேயம் | 266-268 |
| 76. | நா.பன்னீர்செல்வம் | தமிழ் இலக்கியங்களில் காணும் மனிதநேய மாண்புகள் | 269-273 |
| 77. | தெ.சந்திரா | நீதி இலக்கியங்கள் உணர்த்தும் மனிதநேயம் | 274-276 |
| 78. | தெ.சந்திரா | சங்க இலக்கியத்தில் மனிதநேயம் | 277-280 |
| 79. | தமிழ்செல்வி.த | அஃறிணை உயிர்களிடத்தில் மனிதநேயம் | 281-283 |
| 80. | ச.குருஞானாம்பிகா | சங்க இலக்கியத்தில் மனிதநேயம் | 284-286 |
| 81. | சு.பிரியதர்ஷினி | கண்ணகியின் மனிதநேயம் | 287-290 |
| 82. | மு.சௌந்தரியா | கலித்தொகைத் தலைவியின் மனிதநேய மாண்புகள் | 291-294 |
| 83. | மோகனப்பிரியா.ச | கம்பராமாயணத்தில் இராமனின் மனிதநேயம் | 295-297 |
| 84. | த.திலகவதி | சூரியகாந்தன் நாவல்களில் மனிதநேயம் | 298-301 |
| 85. | ப.பத்மா & காசிபட்டா சத்யமூர்த்தி | பக்திஇலக்கியங்களில் மனிதநேய மாண்புகள் | 302-306 |
| 86. | வானதிபகீரதன் | ஈழத்துசிறுவர் பாடல்களில் உயிர்களிடத்தில் அன்பும் மனிதநேயமும் | 307-310 |
| 87. | கா.மகேசுவரி | புறநானூற்றில் மனிதநேய விழுமியங்கள் | 311-313 |
| 88. | மு.செந்தமிழ்ச்செல்வி | மூதின் முல்லைப் பாடல்களால் மானுடம் | 314-316 |
| 89. | K.சாந்தி முனைவர் & C.விஸ்வநாதன் | சித்தர் இலக்கியத்தில் மனித நேயப்பண்புகள் | 317-321 |
| 90. | த. கீதாஞ்சலி | கடையெழுவள்ளல்களின் மனிதநேயமாண்புகள் | 322-325 |
| 91. | தங்கராசா கோபிநாத் | சுப்பிரமணிய பாரதியாரது தேசபக்திபாடல்களில் மனிதநேயம் | 326-329 |
| 92. | சி.அமுதா | எட்டுத்தொகை அகப்பாடல்களில் தொழில்சார் மனிதநேயம் | 330-333 |
| 93. | இரா.இரமேஷ் | தமிழ் இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள் | 334-340 |
| 94. | கா. திருநாவுக்கரசு & செ.விஸ்வநாதன் | கம்பன் வடித்த இராவணன்பாத்திரமும் பேராண்மை அறமும் | 341-345 |

Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# தமிழர் பண்பாட்டில் பசிப்பிணி போக்கும் மனிதநேய மாண்புகள்

செ.மகேஸ்வரி
முனைவர் பட்ட ஆய்வாளர்
மனிதவள மாண்புத்துறை,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி.

**முன்னுரை**

இனம், மதம், மொழி, நாடு இவற்றையெல்லாம் தாண்டித் திகழ்வதுதான் மனித நேயம். ஒரு மனிதன் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும் மனிதநேயத்துடன் வாழ்வது அவசியம். மனிதர்களுக்குரிய உயரிய பண்புகளில் ஒன்று மனிதநேயம். இம் மனித நேயமே மனித இனத்தை விலங்கினத்திலிருந்து பிரித்துக் காட்டும் ஒன்றாக உள்ளது.

**புறநானூற்றில் மனித நேயக் கொள்கைகள்**

புறநானூறு என்பது சங்ககால இலக்கியத் தொகுதியில் எட்டுத்தொகை நூல்களில் ஒன்று. (மனித நேயம் மனிதநேயம்) மனிதநேயம் என்பது பிற உயிர் துன்பப்படும் பொழுது உதவி செய்தலே ஆகும். உளமார அன்போடு ஒருவரின் மனம் நெகிழும் படியாக ஒருவர் மற்றொருவர்மேல் வெளிப்படுத்தும் நேசமும் நட்பும் கலந்த உணர்வே மனிதநேயம் ஆகும். பல ஆண்டுகளுக்கு முன்னரே பசி போக்கும் பெருஞ்செயலை சேரமான் பெருஞ்சோற்று உதியன் செய்துள்ளான். போரில் படைவீரர்களுக்கும் காயம் பட்டவர்களுக்கும் உணவு அளித்து உபசரித்துள்ளாள் என்ற செய்தியைப் புறநானூற்றுப் பாடல் மூலம் அறிய முடிகிறது. "அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ, நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை ஈரைம் பதின் மரும் பொருது, களத்து ஒழியப் பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்! ( புறம் 2)

உணவு கொடுப்புது தானம் என்றாலும் அதுவும் மனித நேயமாக உணரமுடிகின்றது. எந்தவித எதிர்பார்ப்புயின்றி போர்க்களத்தில் உணவு அளிப்பது மனிதநேயம் என்றுஎடுத்துக் கொள்ளலாம்.

**வள்ளுவத்தில் மனித நேயச் சிந்தனைகள்**

உணவு என்பது விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. உயிர் காக்கும் மருந்தாக இருப்பினும் அதை விருந்துடன் பகிர்ந்து கொள்வதே சிறப்பானது. வேள்வியைவிட விருந்தோம்பலே மேன்மையானது.

**"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து**
**நல்விருந்து ஓம்புவான் இல்"**

(குறள் 84)

முகமலர்ச்சியுடன் விருந்தினரை கவனிப்பவர்களது வீட்டில் திருமகள் மனம்மகிழ்ந்து வாழ்வாள்.

**"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகியற்றி யான்"**

(குறள் 80)

என வள்ளுவர் பசியால் வாடும் மக்களைப் படைத்த மகேசனையே சாடுகிறார்.

**பெரியபுராணத்தின் மனித நேயம்**

இளையான்குடிமாறநாயனார் 63 நாயன்மார்களில் ஒருவர் ஆவார். இளையான்குடியில் பிறந்த மாறனார் உழவுத் தொழிலில் வந்த பெருஞ்செல்வமும் சிவனடியாரிடத்து அன்புள்ளமும் உடையவராய்த் திகழ்ந்தார். சிவனடியார் தம் இல்லத்திற்கு வந்தால் எழுந்து நின்று வணங்கி கைகூப்பி இனிய

மொழிகளைக் கூறி வரவேற்று அவர்களுக்கு உணவளிப்பார்.

அடியார்க்குத் திருவமுதளித்தலாகிய இத் திருப்பணியைச் செல்வக் காலத்திலே மட்டுமின்றி வறுமையுற்ற காலத்திலும் விடாது செய்யவல்லார் இந்நாயனார் என்னும் உண்மையினை உலகத்தார்க்கு அறிவுறுத்த இறைவன் திருவுள்ளம் கொண்டார். இதனால் இளையான்குடிமாற நாயனாரின் செல்வம் குறைந்து வறுமை உண்டாகியது. இவ்வாறு செல்வம் சுருங்கினாலும் தம்மிடமிருந்த நிலங்கள் முதலியவற்றை விற்றும் கடன் வாங்கியும் அடியார்க்கு அமுதளிக்கும் பணியை விடாது செய்து வந்தார்.

ஒரு நாள் மாரிக் காலத்தில் தாம் உணவின்றபி பசியால் வாடியபோதும் இரவு நேரத்தில் சிவனடியார் யாரும் வராததால் கதவைப் பூட்டிவிட்டு வீட்டினுள் சென்றார். நள்ளிரவு நேரத்தில் சிவபெருமான் அடியார் கோலங்கொண்டு மாறனாரது மனைக்கு வந்து கதவைத் தட்டினார். மாறனார் அவரை வரவேற்றார். அடியார்க்கு உணவளிக்க வீட்டில் ஏதும் இல்லையே என வருத்தம் மிகுந்தது. அன்றையப் பகற்பொழுதில் நிலத்தில் விதைக்கப்பட்ட நெற்மணிகளைச் சேகரித்து வந்து, கீரைகளைப் பறித்து அடுப்பெரிக்க விறகில்லாமல் வீட்டின் கூரைகளைப் பயன்படுத்தி உணவு சமைத்து மாறனாரும் அவரது மனைவியும் சிவனடியார்க்கு உணவு படைத்தனர். அப்பொழுது அடியராய் வந்திருந்த பெருமான் சோதிப்பிழம்பாய் எழுந்து தோன்றினார். அதுகண்டு மாறனாரும் அவரது மனைவியும் திகைத்து நின்றனர். இறைவனுடைய அருள் அவர்களுக்குக் கிடைத்தது. இவ்வரலாற்று நிகழ்வு இறைவனுக்கே உணவு படைத்த பெருமையர் என்பதற்காக மட்டுமன்று, நள்ளிரவு நேரத்திலும் பசிபோக்கும் பண்பாட்டைத் தவறாது கடைபிடித்த கொள்கையைக் கூறுவதாகவும் உள்ளது.

## மணிமேகலையில் மனிதநேயம்

தமிழில் தோன்றிய முதல் காப்பியமாகிய சிலம்பின் தொடர்நிலைக் காப்பியம் மணிமேகலை. சாத்தனார் யாத்தது, பௌத்தம் சார்ந்தது, காப்பியத் தலைவி மணிமேகலை. மாதவி பெற்ற மகள் துறவுச் செல்வி பசித்தவறுக்கு அன்னை.

மணிமேகலையை அவள் பெயர் கொண்ட தெய்வம் மணி பல்லவத் தீவில் விட்டது. அங்கிருந்த தீவதிலகை என்னும் தெய்வம் தோன்றிப் பல்வேறு அறிவுரைகள் கூறியது. அது பசியின் கொடுமை பற்றி விவரித்தது. யாருக்கு அன்னதானம் வழங்குதல் வேண்டும் என்பதையும் விளக்கிக் கூறியது. அவளுக்கு ஆபுத்திரன் கையில் இருந்த அமுத சுரபி கிடைத்தது. அது

"குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும் பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம் நாண் அணிகளையும் மாண் எழில் சிதைக்கும் புண்முதலை மாதரொடு புறங்கடை நிறுத்தும் பசிப்பிணி"

நீக்கும் பான்மையது அள்ள அள்ளக் குறையாதது அந்த அமுதசுரபியை ஏந்திய அருள் மகள் மணிமேகலை.

"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம் உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தோரே என்னுந் தகைமையால் ஊர்ஊர் ஆங்கண் உறுபசி உழந்தோர் ஆரும் இன்மையின் அரும்பிண ஊற்றோர்"

தருமம் செய்வது பெரிதன்று அதை தக்கோர்க்குச் செய்தல் வேண்டும் இதனைத் தான் பாத்திரம் அறிந்து பிச்சையிடு என்பார்கள். ஒருவர்க்குத் தரும் உணவு அவருக்கு உயிர் கொடுத்தற்கு நிகரான செயலாகும் இவ்வாறு செய்பவரின் வாழ்க்கையே செம்மையான சிறப்பான வாழ்க்கையாகும்.

**பாரதியின் மனிதநேய மாண்புகள்**

சமுதாய வளர்ச்சிக்கு மனிதநேயம் மிக அவசியமானதாகும். வெறுப்பு, பகைமை, பொறாமை ஆகியவைகளுக்குப் பதிலாக அன்பு, நட்பு, நேசம், கருணை மனிதனுக்கு மனிதன் மரியாதை கொடுத்து திறமைகளை அங்கீகரித்தல் ஆகியவை வளர்க்கப்பட வேண்டும். பாரதி தனது கவிதைகளில் பாடல்களில் உயர்ந்தபட்ச மனிதாபிமானப் பண்பை வெளிப்படுத்தியுள்ளார்.

பாரதியோ "தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று பசியால் பரிதவிக்கும் நிலை கண்டு இந்தப் பார் தான் அதற்குக் காரணம் என்று எண்ணிய பாரதி மனிதநேயம் இல்லாத இந்த மண்ணுலகம் இருந்தென்ன பயன் என்கின்றார்.

**ஔவையின் நீதி நூல்களில் மனிதநேய மாண்பு**

மனிதர்களுக்கு தேவைப்படும் உணவு, உடை, உறையுள் என்பனவற்றுள் அடிப்படைத் தேவையாக உணவு என்பது இடம் பெறுகிறது. உடையும் உறையுளும் இல்லாமல் கூட மனிதன் உயிர் வாழ முடியும். ஆனால் உணவு என்ற ஒன்று இல்லையேல் மனிதன் இவ்வுலகில் உயிர் வாழ்வது என்பது இயலாது.

ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி நூல்களில் ஔவையார் நாற்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் உணவைப் பற்றிப் பேசியுள்ளார்.

**உணவு தானம்**

உணவைத் தானம் கொடுத்தலைப் பற்றி ஔவை "ஐயமிட்டு உண்" என்று மொழிகிறார். இதில் ஏழை எளியவர்களுக்கு உணவிட்ட பின்னரே தான் உண்ண வேண்டும் என்ற கருத்துப் பொதிந்துள்ளது. மேலும் இதே கருத்தைக் கொன்றை வேந்தனில்

"சையொத்திருந்தால் ஐயமிட்டுண்"
(கொன் - 34)

இதன் கருத்து ஏழை எளியவர்களுக்கு தானம் செய்து உண்ண வேண்டும் என்பதாகும்.

"ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந்
நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்-
ஏற்றவர்க்கு
நல்ல குடிபிறந்தார் நல்கூர்ந்தார்
ஆனாலும்
இல்லை என மாட்டார்
இசைந்து" (நல்வழி - 9)

மழையின்மையால் ஆறு வற்றி வறண்ட காலத்தும் தன்னிடம் உள்ள ஊற்று நீரால் உலகத்தவரின் தாகத்தைப் போக்கும் அதுபோல நல்ல குடியில் பிறந்தவர் தான் வறுமையடைந்த காலத்தும் தம்மால் இயன்ற அளவு உணவை தானத்தை அளிப்பார்.

**விருந்தோம்பல் செய்வதும் விரதமும்**

உணவைப் பற்றிய மிகுதியான செய்திகளைத் தன் நூல்களில் பதிவு செய்துள்ள ஔவை ஓரிடத்தில் உணவோடு தொடர்புடைய விருந்தோம்பலைப் பற்றி "விருந்திலோர்க்கு இல்லை பொருந்திய வொழுக்கம்" என்று சுட்டுகிறார். இதிலிருந்து விருந்தோம்பல் பண்பில் இருந்த ஔவையின் மனிதநேயம் என்ற ஆழ்ந்த கருத்துப் புலப்படுகின்றது.

விருந்தே புதுமை என இலக்கண நூல் கூறும். உற்றார், உறவினர், தெரிந்தவர்கள் என்று உணவிடுவது விருந்தன்று. நமக்கு அறிமுகமில்லாதவர்கள் வழிப்போக்கர்களின் பசியைப் போக்குவது மனிதநேயமே அந்நாளில் விருந்து எனப்பட்டது.

**வள்ளலாரின் இரக்கமும் மனிதநேயமும்**

ஏழைக்கு உணவு அளிப்பதே சிறந்த வழிபாடு என உறுதியான கொள்கை கொண்ட

இராமலிங்க அடிகள் 1865 – ல் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தைத் தோற்றுவித்தார். தனி மனித வாழ்விலும் செயலிலும் தயை குணத்துடனும் ஜீவகாருண்ய ஒழுக்கத்துடனும் அருள் உள்ளத்துடனும் தனி மனிதன் வாழ வேண்டும் என்று வள்ளலார் தாம் அமைத்த சங்கத்தின் மூலம் வலியுறுத்தியுள்ளார். எல்லா உயிர்களையும் சமமாகக் கருதியதால் தான் "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" எனப் பாடினார்.

பசி என்கின்ற நோய் தனிமனிதனுக்கு மட்டுமல்லாது சமுதாயத்தில் உள்ள மக்கள் அனைவருக்கும் உள்ள நோய் என்பதை உணர்ந்து தான் உயிரக்கம் வளர்வதற்குரிய சாதனமாகிய பசி ஆற்றலுக்கு சத்திய தருமச்சாலையை வடலூரில் 23.05.1867-ல் நிறுவினார். அன்று தோற்றுவிக்கப்பட்ட அடுப்பில் உள்ள தீ இன்று வரை தொடர்ந்து எரிந்து பசித் தீயை அணைத்து வருகிறது.

இக்காலச் சூழலுக்கு குறிப்பாக இளையோரிடத்தில் வள்ளலாரின் இரக்கக் கொள்கைகளை அவசியம் அறியச் செய்தல் வேண்டும். வள்ளலார் கண்ட இரக்க உணர்வும் மனிதநேயமும் நம்மிடையே வருமானால் மக்களிடம் உள்ள அரக்க உணர்வு அழிந்து இரக்க உணர்வு மேலோங்கும் என்பது திண்ணமாகும்.

**வேதாத்திரி மகரிஷியின் மனிதநேய மாண்பு**

வேதாத்திரி மகரிஷி அவர்கள் தங்களுடைய 14 அம்சத் திட்டத்தில் பார் முழுவதும் உணவு, நீர் பொதுவாக்கல் என்றவொரு உயர்வான திட்டத்தைக் கொடுத்துள்ளார். உலகத்தில் பிறந்த மனிதனுக்கு உலகம் முழுவதும் சொந்தம் என்பது இறைநீதியாகும். இயற்கைக்கு ஒத்த, பிணக்கில்லாத அற நீதியும் அதுவே ஆகும். மனித குலத்திற்கு இன்றியமையாத வாழ்க்கைத் தேவைப் பொருளான தண்ணீர், காற்றைப் போல, வெயிலைப் போல எல்லோருக்கும் உணவு, நீர் பொதுவாகவே அமைய வேண்டும் என்கின்றார்.

கடமையே பற்றுக்களாகியது

"உணவை ஒருவருக் கொருவர் அளிக்க வென்ற......

உருவாகி பல விதத்தும் துன்பம் ஏற்றான்". இப்பாடலின் மூலம் விளக்கியுள்ளார்.

**விழாக்களில் விரையம் தவிர்ப்போம்**

ஈந்து உவந்த வாழ்க்கை இன்றில்லை. வருவோர் போவோருக்கெல்லாம் பசியாற்றிய பண்பாடும், விருந்தோம்பிய வீட்டுத் திண்ணைகளும் இன்றில்லை, விதை நெல்லைக்கூட எடுத்துச் சமைத்து விருந்தோம்பயவர்கள் தமிழர்கள் என்பதை நமது இலக்கியங்கள் காட்டுகின்றன. இன்னொருபக்கம் திருமண விழாவின்போது பல்லாயிரக்கனவர்களை அழைத்து அதுபோல் யாரும் நடத்தியதில்லை என்று சொல்லும் படியாகச் செய்ய வேண்டும் என்றும், ஒன்றை மற்றொன்று விஞ்சுகிற வகையில் வசதி படைத்தவர்கள் ஏராளமாக உணவையும், பொருளையும் விரயமாக்குகிற செயல்கள் பெருகி வருகின்றன.

இப்படித் திருமணத்தின் பெயரால் நடத்தப்படும் உணவுப் பொருள் விரயத்தை தவிர்த்து அதையே அரசுக்கு தந்தால் நாட்டில் பட்டினியாய் யாரும் இல்லை என்ற நிலையை உருவாக்கிடலாம். இன்னும் ஒருபடி சென்று மதுவுக்கும், புகைக்கும் செலவிடுகின்ற பணத்தை மிச்சப்படுத்தினால் ஏழைகளுக்கு முப்போதும் உணவளிக்க முடியும். இதற்கு மனிதநேயம் இருந்தால் போதும்.

**முடிவுரை**

விதைக்குள் முளைப்பு இருப்பதுபோல மனிதனுக்குள் நேயம் நிரம்பி இருக்கின்றது. பிள்ளைகளிடையே மனித நேயத்தை வளர்த்தல் அவசியமாகும். இன்றைய மாணவர்களிடையே சக மனிதர்களையும் மதிக்கும் மனித மாண்பை எடுத்துரைக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் நம் அனைவருக்கும் உள்ளது என்பதில் மாற்றம் கிடையாது.

**துணை நூற் பட்டியல்**


1. புறநானூறு மூலமும் உரையும் - டாக்டர். உ.வே.சா
2. திருத்தொண்டத் தொகை – சுந்தரமூர்த்தி சுவாமிகள்
3. மணிமேகலை - சீத்தலைச்சாத்தனார்
4. உலக சமாதானதிட்டங்கள் - வேதாத்திரி மகரிஷி
5. கொன்றை வேந்தன், நல்வழி - ஔவையார்


❖❖❖